www.padippakam.com

புதியபூமி
PUTHIYA POOMI

## தொற்றுநோய்! கவனம்!!

தேயிலை, றப்பர் அரச பெருந்தோட்டங்களுக்கும் மக்கள் மயம்' எனும் பயங்கரமான தொற்றுநோய் பரவும் அபாயம் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய அரச தொழிற்றுறைகளை கொன்றொழித்து வரும் அந்த தொற்றுநோய் அரச பெருந்தோட்டங்களையும் விட்டுவைக்கப் போவதில்லை என்று அச்சம் கொள்ளப்படுகின்றது. பெற்றோர்களான தோட்டத்தொழிலாளர்கள் அவர்களது பிள்ளைகளான பெருந்தோட்டங்களை 'மக்கள்மயம்' என்னும் கொடிய தொற்றுநோய் பீடிக்காமலிருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களாக!

சுற்று : 5 ● 1991 யூன் ● விலை : ரூ. 6/- ● சுழற்சி : 1

# தோட்டங்கள் தனியார் மயமாகும் அபாயம்!

## இதற்கு துணைபோவது பெரும் துரோகம்!

பெருந்தோட்டங்கள் யாவும் தனியார் மயமாக்கப்படவுள்ளதாக நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசாங்கம் அறிவித்துவருகின்றது. அரசாங்க தொழிற்துறை எதனையும் தனியார் மயமாக்குவதை இலங்கை மக்கள் எப்போதும் எதிர்த்தே வருகின்றனர். தொழிற் துறைகள் தனியார் உடைமையாக அல்லது தனிப்பட்டவர்களினதும் கம்பெனிகளினதும் உடைமையாக இருந்த காலத்தில் அவற்றில் வேலைசெய்த தொழிலாளர்கள் எவ்வாறு நசுக்கப்பட்டனர் என்பதனையும் யாவரும் அறிவார்கள்.

தொழில்துறைகள் தனியார் உடைமையாக இருந்தபோது அவற்றின் வருமானம் முழுவதும் முழுதேச நலனுக்கன்றி தனிப்பட்டவர்களுக்கே சென்றடைந்தது. அக்காலத்தில் மக்களுடைய நலன்களுக்காக அரசாங்கம் பெருந்தொகை பணத்தை செலவிட முடியாதிருந்தது.

தற்போதைய ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் நாட்டின் ஆட்சிப்பொறுப்பைஏற்ற பிறகு தொழில் துறைகளை 'மக்கள் மயமாக்குகிறேன்'- அதாவது தொழில் துறைகளில் மக்களும் தொழிலாளர்களும் பங்குதாரர்களாக முடியும் என்ற பேரில் வெகு நாசூக்காக வெற்றிகரமாக இலங்கை போக்குவரத்துச் சபை உட்பட பல பாரிய அரசாங்க தொழில் துறைகளை தனியார் மயமாக்கிவிட்டார்.

மக்கள் மயமாக்குதல் என்ற பேரிலான தனியார் மயமாக்கும் நாசகார பாதையில் தற்போது பெருந்தோட்ட தொழில் துறையும் இழுத்துச் செல்லப்பட அபாயமணி அடிக்கப்படுகின்றது. தோட்டங்களில் பெரும்பாலானவை தற்போது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின் கீழேயே இருக்கின்றன. அதனால் பல நன்மைகள் ஏற்பட்ட அதேவேளை சில குறைபாடுகளும் இல்லாமல் இல்லை. ஆனால் தோட்டங்கள் அரசாங்க கூட்டுத்தாபனங்களாக நிர்வகிக்கப்படுவதால் நிலவும் குறைபாடுகளையே இப்போது அரசாங்கமும் தனிப்பட்ட முதலாளிகளும் பறைசாற்றி வருகின்றனர்.

தோட்டங்களை தனியார் மயமாக்குவதனை அரசாங்கத்திலுள்ள பலரும் எதிர்த்து வருகின்றனர் என்பதும் தெரிந்ததே. குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட முன்னாள் பெருந்தோட்ட தொழில் துறை அமைச்சரும், நீண்டகாலமாக தோட்டத்துரையாக இருந்தவருமான திரு. ரஞ்சன் விஜேரட்ன தோட்டங்களை தனியார் மயமாக்குவதை எதிர்த்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இருந்தபோதும் உலக வங்கியினதும் கடன் வழங்கும் மேலைத்தேய நாடுகளினதும் நிபந்தனைகளாலும் தோட்டங்களை தனியார் மயமாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெருந்தோட்டங்கள் தனியார் மயமாக்கப்படுவதால் பல பணக்காரர்கள் தோட்டங்களை அரசாங்கத்திடமிருந்து விலைக்கு வாங்குவார்கள். அவர்கள் பணத்தைச் சம்பாதித்து தங்களது பெட்டகங்களை நிரப்புவார்கள். அவர்களது பெட்டகங்களை நிரப்புவதற்கு தடையாக இருக்கும் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றுவார்கள்.

பிரிட்டிஷார் காலத்தில் வாய்திறக்க முடியாதிருந்த தோட்டத்தொழிலாளர்களை மீண்டும் கொத்தடிமைகளாகுவதனால் தான் தமது தனிப்பட்ட பண முதலைகளினுடைய தேவை நிறைவேற முடியும். அதற்காக எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்படும். நூற்றாண்டு காலமாக போராடிப்பெற்ற தொழிற்சங்க உரிமை, அரசியல் உரிமைகள் என்பவற்றை தகனக்கிரியை செய்ய முயற்சிகளை எடுப்பார்கள்.

வர்க்க, இன அடக்கு முறைகளுக்கு மத்தியில் ஒரு சமூகமாக வளர்ந்துவரும் தோட்டத் தொழிலாளர்களினது வளர்ச்சிக்கு முடிவு காணும் நடவடிக்கை எடுக்கப்படும். அதன்மூலம் இந்நாட்டின் முதலாளிவர்க்கமும், பேரினவாதிகளும் அவர்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வார்கள். இதன் மூலம் இந்நாட்டின் பழம் பெரும் தொழிலாளர் வர்க்கம் 'சமூக சீரழிவு' பாதைக்கு இட்டுச் செல்லப்படும்.

இதனைத் தோட்டத்தொழிலாளர்களோ தொழிற்சங்கங்களோ அறியாமல் இல்லை. உதாரணமாக, தனியார் கம்பெனி ஆட்சியில் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளின் கல்வி எவ்வாறு மறுக்கப்பட்டது என்பதனையும் தோட்டங்கள் அரசமயமாக்கப்பட்ட பிறகு எவ்வாறு

(2ம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தை நிறுத்தவும்! தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை உறுதி செய்யவும்!

### புதிய - ஜனநாயக கட்சி ஜனாதிபதிக்கு கடிதம்

''வடக்கு கிழக்கை அழிவிலிருந்து மீட்க எமது நாடு வல்லரசுகளினதும், பிராந்திய மேலாதிக்க சக்திகளினதும் பலப்பரீட்சைக்களமாக மாற்றப் படாமலிருக்க கடந்த ஒரு வருடமாக அழிவுகளையே மீதமாக்கியிருக்கும் வடக்குக் கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து அரசியல் தீர்வு தொடர்பாக அரசாங்கம் கடைப்பிடிக்கும் மௌனத்தைக் கலைத்து தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமையை உறுதிசெய்யும் வகையிலான தீர்வொன்றை அரசாங்கம் விரைவில் ஏற்படுத்த வேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் இ. தம்பையா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் கடந்த யூன் மாதம் 11 ஆம் திகதி தொடங்கி ஒரு வருடமாகியும் இன்னும் யுத்தம் தொடர்வதுகுறித்து ஜனாதிபதிஅவர்களுக்கு புதிய - ஜனநாயகக் கட்சியின் தேசிய அமைப்பாளர் எழுதிய கடிதத்திலேயே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(5ம் பக்கம் பார்க்க)




இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது)யின் 2வது தேசிய மகாநாடு கடந்த மே 4ஆம், 5ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றது. மேற்படி படத்தில் மகாநாட்டின் தலைமை குழுவினரைக் காணலாம். பொதுச்செயலாளர் தோழர் இ. கா. செந்திவேல் அரசியல் அறிக்கையை சமர்ப்பிக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
PUTHIYA BOOMI

ஆசிரியர் குழு
26/74, வைத்தியா வீதி,
தெஹிவளை.

1991 யூன்

## பாஷைப் பிரச்சினை தீர்க்கப்பட்டது!

அண்மையில் கம்புறுப்பிட்டியில் நடைபெற்ற கம் உதாவ வைபவத்தினை தொடக்கி வைத்து உரையாற்றிய கௌரவ ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ அவர்கள் 'நாட்டின் பாஷைப் பிரச்சினை, பிரஜாவுரிமைப் பிரச்சினை, வேலையில்லாப் பிரச்சினை என்பவற்றை தீர்க்க முடியுமாயின் அதிகார பரவலாக்கல் பிரச்சினையை ஏன் தீர்க்க முடியாது?' என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழும் அரச கரும மொழி என சட்டம் ஆக்கப்பட்டு மூன்று வருடங்களாகின்றன. அதனை அமுலாக்குவதற்கென ஒரு சட்டம் ஆக்கப்பட்டு ஏறக்குறைய ஒரு வருடமாகிறது. அரச கரும மொழி அமுலாக்கலை கவனிக்க ஒரு ஆணைக்குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையில் வடக்கு கிழக்கிலும் அதற்கு வெளியிலும் மலையகம், கொழும்பு, நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் உட்பட தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பரந்து வாழும் பகுதிகளில் அம்மக்கள் அவர்களது நாளாந்த கருமங்களை தமிழ் மொழியில் செய்யக்கூடியதாக இருக்கின்றனர்.

தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் வாழ்கின்ற எல்லாப் பகுதிகளிலும் சகல அரசாங்க திணைக்களங்களிலும் அரசாங்க அதிபர் காரியாலயம், கச்சேரி, கிராம சேவகர் காரியாலயம் தபால் சேவைகள் உட்பட சகலவற்றிலும் தமிழ் மொழியில் அல்லது தமிழ் மொழியிலும் கருமங்கள் நடக்கின்றன. பதிவேடுகள் யாவும் தமிழில் வைக்கப்பட்டுள்ளன அல்லது தமிழிலும் வைக்கப்பட்டுள்ளன.

நீதிமன்றங்களில் தமிழ் மொழியில் கருமங்கள் ஆற்றப்படுகின்றன. வழக்கு பதிவேடுகள் தமிழில் அல்லது தமிழிலும் வைக்கப்பட்டுள்ளன. தமிழில் வழக்குகள் நடத்த முடியாதவிடத்து தமிழ் மொழி பெயர்ப்பு வழங்கப்படுகின்றது.

தமிழ்மொழியை வளர்க்க பல ஆய்வுகளும் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன."

மேற்படி நிலைமை இலங்கையில் இருக்கிறதென்றால் தமிழ் மொழிப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. பாஷைப் பிரச்சினை தீர்க்கப்பட்டது என்று கூறுவதில் பிழையேதும் இருக்க முடியாது.

## கொக்கட்டிச்சோலையில் கொடூரம்

கொக்கட்டிச்சோலையில் நடந்த சம்பவம் என்ன? அவற்றை செய்தவர்கள் யார்? என்பதெல்லாம் மிகவும் வெளிச்சமானதாகும். அச்சம்பவத்தை செய்த நபர்கள் யார் என்பதனை அறிந்து அவர்களை தனிப்பட தண்டிப்பதற்காக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் விசாரணைகள் பற்றி மக்கள் அறிவர். சம்பவங்களை புரிந்தவர்கள் குற்ற நோக்கத்துடன் புரியவில்லை அல்லது அவை யாவும் தறசெயலாக நடந்தவை என்று தீர்ப்பு வழங்கப்படுவது வழமை. இதுவரை ஆணைக்குழுககள் செய்யும் சிபாரிசுகள் நடைமுறைப் படுத்தப்பபட்டதாகவும் நாமறியோம்.


சிலவற்றுக்கு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்படும் என உறுதியாக்கப்பட்டபோதும அவை பற்றி கதையே இல்லாமல் போய்விடுவதும் வழமை. பத்திரிகையாளர் ரிச்சட் டீ சொய்ஸா கொலை செய்யப்பட்டமை பற்றி விசாரணைக்குழு நியமிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஜே.வி.பி யின் தலைவர் ரோஹண விஜேவீரவின் கொலை பற்றியும் ஆணைக்குழு விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் கொலை பற்றியும் ஆணைக்குழு விசாரணை மேற்கொள்ளப்படும் என்று கூறப்பட்டது. ஆனால் அவை பற்றி இப்போது எதுவுமே கதைக்கப்படுவதாக தெரியவில்லை. அந்த வகையில பார்க்கும்போதும் கொக்கட்டிச்சோலை சம்பவம் பற்றி விசாரணை செய்ய ஆணைக்குழு நியமிக்கப்பட்டது வரவேற்கத்தக்கதாகும். ஆனால் அதன் நோக்கம் நிறைவேறுவதற்கு எவ்வித இடையூறுகளும் இருக்கக்கூடாது. அச்சம்பவத்தில் பாதிகசப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படவேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்.

அதற்கு மேலாக அவ்வாறான சம்பவம் இனிமேல் நடக்காத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். இராணுவத்திற்கும் மக்களுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைகளை இல்லாதொழித்து அமைதியுடன் மக்கள் வாழும் சூழ்நிலைகள் ஏற்படுத்தவேண்டும். அமைதியை ஏற்படுத்தி குழப்பநிலைக்கு காரணமான பிரச்சினையை தீர்க்க வேண்டும்.

இப்பிரச்சினையை தீர்க்கும்வரை கொக்கட்டிச்சோலையில் நடந்தது போன்று சம்பவம் ஒன்றென்ன பல நடந்துகொண்டேயிருக்கும்.

# யுத்தத்தின் அகோரத்தால் அவதியுறும் வடக்கு-கிழக்கு மக்கள்

வடக்கு கிழக்கில் மூண்ட யுத்தம் இம் மாதம் யூன் 11ம் திகதியுடன் ஒருவருடத்தைப் பூர்த்தி செய்துகொண்டுள்ளது. இந்திய இராணுவத்தின் அமைதிப்படை ஆக்கிரமிப்பின் கீழ் முப்பத்திமூன்று மாதங்களை வடக்கு கிழக்கு மக்கள் விபரிக்க முடியாத துன்பங்கள், வேதனைகள், கொடுமைகள் மத்தியில் கழித்திருந்தனர். இந்தியப்படை வெளியேற்றத்துடன் ஒரு நிம்மதிப் பெருமூச்சு விட்ட தமிழ்பேசும் மக்கள் மீண்டும் தாம் ஒரு யுத்த சூழலுக்குள்ளும் அதன் கொடிய கரங்களுக்குள்ளும் அகப்படுவோம் என்று எண்ணியிருக்கவில்லை. ஒரு குறைந்தபட்ச இணக்கப்பாடும் அதன் அடிப்படையில் ஓர் சமாதான சூழலும் வரும் என்றே நம்பியிருந்தனர். 1977 ல் தொடங்கிய உயிர் உடைமை இழப்புகளும் இரத்தமும் – கண்ணீர்ப் பெருக்குகளும் முடிவுக்கு வரும் என்றே எதிர்பார்த்தனர். ஆனால் சகல எதிர்பார்ப்புக்களையும் தூக்கி எறிந்த நிலையில் 1990 ம் ஆண்டு 11ம் திகதி மீண்டும் யுத்தம் மூண்டது. தமிழ் பேசும் மக்களைப் பொறுத்து இவ் யுத்தம் ஒரு திணிப்பு யுத்தமாகியது. பேரினவாத வெறிகொண்ட யுத்தமாகியது. இணக்க அடிப்படையில் விட்டுக் கொடுப்புடன் கூடிய சமாதான வழிகளில் அரசியல் பேச்சு வார்த்தைகளால் தமது குறைந்தபட்ச உரிமைகளை எதிர்பார்த்து நின்ற தமிழ்பேசும் மக்கள் கோரமான யுத்தத்தின் கொடுமைகளுக்கு மீண்டும் ஆளாக்கப்பட்டனர்.



கடந்த 3 வருடத்தில் இவ் யுத்தம் தனது முழுமையான கோரத்தனங்கள் யாவற்றையும் மககள் மீது பதித்துமுழு சமூகத்தையுமே சின்னாபின்னப்படுத்தி விட்டது. ராணுவத் தாக்குதல்கள் எதிர்த் தாக்குதல்கள், விமானக் குண்டு வீச்சுக்கள், ஷெல் குண்டு ஏவல்கள் மக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து வருகின்றன. பல ஆயிரக்கணக்கான உயிர்கள் பலிகொள்ளப்பட்டதுடன்பல நூறு கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. நீண்ட காலச் சேமிப்பு யாவும் பாழாக்கப்பட்டன. எஞ்சப்போவது வெறும் நடைப்பிணங்கள் மட்டும் தானா என்ற பலமான கேள்வி மட்டுமே எஞ்சி நிற்கின்றது. யுத்த வெறித்தாண்டவத்தின் ஒரு அம்சமாக பொருளாதாரத் தடை இறுக்கமாக இருந்து வருகிறது. மின்சாரம், எரிபொருள் உட்பட இருநூறுக்கும் அதிகமான பொருட்கள் தடை செய்யப்பட்டவையாக இருந்து வருகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை அத்தியாவசிய பாவனைப் பொருட்களாகும். பணப் புழக்கம் இல்லாமையால் சகல தரத்திலுமுள்ள மக்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். தொழிலாளர்களும் விவசாயிகளும் கடும் பாதிப்புக்களை அடைந்துள்ளனர். விலைவாசிகளின் ஏற்றம் நான்கு மடங்கிற்குமேல் உள்ளது. தொழிற்றுறை சீர்குலைக்கப்பட்டுள்ளதுடன் கல்வி கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டு ஒரு சந்ததியிடை வெளி ஏற்படக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. இவை யாவும் தமிழ் மக்களை ஒரு திட்டமிட்ட சமூகப் பின்னடைவிற்கு கொண்டு செல்லும் பேரினவாத சூழ்ச்சியாகவே காண முடிகின்றது. இன்று வடக்கு கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் தஞ்சநிலைக்கு சிறு அளவு ஆதாரமாகி நிற்பது வெளி நாடுகளில் இருந்து உறவினர்களால் அனுப்பப்படும் கடுமையான உழைப்பினால் கிடைக்கும் பண ஆதாரம் மட்டுமேயாகும். அதுவும் கிடைக்காவிடின் முழுமையான பட்டினிச் சாவிற்கு மக்கள் தள்ளப்பட்டிருப்பர்.

இத்தனை யுத்தக் கொடுமைகளின் மத்தியிலும் நின்று பிடித்துவரும் தமிழ்பேசும்மக்களின் ஆத்மபலத்தை அழித்தொழித்து அவர்களது நியாயமான உரிமைகளை வழங்க ம்றுத்து நிற்பதில் பேரினவாத பாசிச யூ.என்.பி. அரசாங்கம் கீழ் இறங்கத் தயாரில்லா நிலையினையே கடைப்பிடித்து வருகின்றது. தமிழர்களின் உரிமைகளை மறுத்து இந்த யுத்தத்தை நீடித்துச் செல்வதற்கு இந்த அரசிற்கு தகுந்த உள்நோக்கம் உண்டு. அதாவது முழு நாட்டையும் அந்நிய ஏகாதிபத்திய முதலாளித்துவ சுரண்டல் சக்திகளுக்கு தத்தம்செய்து கொடுத்துவரும் பாதகச் செயலை சிங்கள மக்கள் காணாதிருப்பதற்கு இவ் யுத்தம் ஒரு திசைதிருப்புப்பொருளாகக் காட்டப்படுகிறது. அதற்காக எத்தனை பேரின் உயிர், உடைமைகள் நாசமாக்கப்பட்டாலும் பரவாயில்லை என்றே கொள்ளப்படுகின்றது. ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவலாளர்களுக்கும் எத்தனை மனித உயிர்கள் அழிக்கப்பட்டாலும் அதைப் பற்றி கடுகளவாவது கவலை இல்லை. தமது சுரண்டல் ஆதிக்கம் நிலைத்தால் போதும் என்பதே அவர்களது குறிக்கோளாகும்.

ஆதலினாலேயே மனிதநேயமும், நேர்மையான இன உரிமைகளும், தேசமும் மக்களும் பாதுகாக்கப்பட வேண்டும் என விரும்பும் சகலரும் இன்றைய கோரத்தனமான யுத்தம் நிறுத்தப்பட்டு அரசியல் பேச்சுவார்த்தைகளின் மூலம் அரசியல் தீர்வு ஈட்டப்பட வேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர். அத்தகைய தீர்வே கடந்த ஒரு வருடமாக உச்சநிலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ள இத்திணிப்பு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உள்ள வழிமுறையாகும். அதன்மூலமே அவல வாழ்வுக்குள்ளும், அளப்பரிய இழப்புகளுக்குள்ளும் தள்ளப்பட்டுள்ள வடக்கு கிழக்கின் தமிழ் பேசும் மக்களை அதிலிருந்து மீட்பதற்குரிய வழியாகும்.

## ராஜீவை...

(6ஆம் பக்கத் தொடர்)

படுமோசமான நோய்களும் கூட மேற்கத்தேய நாடுகளிடையே பிறப்பிடமாக கொண்டிருந்த போதும் அவை இன்று மூன்றாம் உலக நாடுகளையே ஆட்டிப்படைக்கின்றன.

அரசியல் படுகொலைகள் உள்நாட்டு சக்திகளாலும், வெளிநாட்டு சக்திகளாலும், மூன்றாம் உலக நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியா, இலங்கை உள்ளிட்ட மூன்றாம உலக நாடுகளில் பொருளாதாரம் உட்பட தத்துவம் வரை எல்லாமே வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை தான் மேற்படி படுகொலைகள் பல்கிப் பெருகுவதற்கு காரணமாகும்.

இந்நிலைமையை மாற்றி, அரசியல் காரணங்களுக்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டு சக்திகளால் மேற்கொள்ளப்படும் தனிநபர் பயங்கரவாத கொலைகள் இடம் பெறுவதைத் தடுத்து நிறுத்த மூன்றாம் உலக நாட்டு மக்கள் புதிய அணுகுமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும்".

## தோட்டங்கள்...

(1ம் பக்கத் தொடர்)

கல்வி வளர்ச்சி காணப்பட்டது என்பதனை மட்டும் ஒப்பிட்டாலே மீண்டும் தோட்டங்கள் தனியார் மயமாக்கப்பட வேண்டும் என்பதை யாரும் விரும்பமாட்டார்கள்.

இருந்த போதிலும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ தன்னை மதிக்கின்றார் என்று கூறி பெருமைப்படும் இ. தொ. கா. தலைவர் தொண்டமான் தோட்டங்களை தனியார் மயமாக்குவதற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

அவர் தோட்டங்களை கிராமமயமாக்கி தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். அதனால் தோட்டங்கள் மக்கள் மயமாக்கப்பட வேண்டும் என்று ஒரு குறிப்பான விளக்கத்தை அளித்திருக்கிறார். தோட்டங்களை தனியார் மயப்படுத்துவது— மக்கள் மயப்படுத்துவதினால் தோட்டங்களை ஒருபோதும் கிராமமயமாக்கி விட முடியாது. அப்படிக் கூறுவது குழப்பமான ஒரு விளக்கமாகும்.

எனவே தோட்டங்கள் மக்கள் மயமாக்கப்படுவதால் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும் என்று கூறுவது முழுப் பிழையாகும். அப்படி கூறுவதன் மூலம் இ. தொ. கா. தலைமைப் பீடம் வழமை போல் யூ. என். பியினதும் பிரேமதாஸவினதும் நோக்கங்களுக்கு துணை போகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. தோட்டங்களை தனியார் மயமாக்க ஜனாதிபதிக்கு உதவுவதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களை மீண்டும் கொத்தடிமைகளாக்க இ. தொ. கா. தலைமைப்பீடம் துணை போகிறது. அதன் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்குப்பெரும் துரோகத்தை இழைக்கிறது என்பதை தோட்டத் தொழிலாளர்களும் உட்பட இந் நாட்டு மக்கள் அனைவரும் உணர்வார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



# இந்து ராஜ்யத்தில் 'ஜனநாயகம்' வந்தது எப்படி?

## நேபாளத்தில் 'ஜனநாயகம்' மலர்ந்தது

நேபாளம் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில் இமயமலை அடிவாரத்தை அடுத்து அமைந்துள்ள நாடு என்பதும் ஒரு இந்து ராஜ்யம் என்பதுமே இதுவரை தெரிந்ததாகும்.

அண்மையில் அங்குதேர்தல் நடைபெற்றமையும் அதில் நேபாள காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்றுள்ளதுடன் நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி பலமான எதிர்க்கட்சியாக வந்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படத் தொடங்கியதும் அடுத்தடுத்து நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பற்றிகுறிப்பிடப்பட்டது. இது உலக மக்களை விழிப்புடன் நேபாளத்தை நோக்கி அவதானிக்க வைத்தது.

நேபாள காங்கிரஸ் கட்சியின் தலைவரும் நேபாள பிரதமராகவும் இருந்த கிருஷ்ண பிரசாத் பட்டாரி நேபாள தலைநகரான கார்ட்மண்டுவிலுள்ள தொகுதியொன்றில் போட்டியிட்டாலும் மக்கள் அவரை தோற்கடித்து அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மதன் பண்டாரியை வெற்றிபெறச் செய்துள்ளனர்.

நேபாளத்திலுள்ள 205 தேர்தல் தொகுதிகளில் 110 தொகுதிகளில் நேபாள காங்கிரஸ்கட்சியும் 69தொகுதிகளில் நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியும் வெற்றி பெற்றுள்ளன. நேபாள காங்கிரஸ் அரசாங்கத்தை அமைத்திருப்பதுடன் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி பலமானஎதிர்க்கட்சியாகவும் வந்துள்ளது. உலகத்திலேயே கம்யூனிஸ்ட்டுகள் பலமான எதிர்க்கட்சியை நேபாளத்தில் அமைத்துள்ளனர் என்றால் பிழையானது.

கம்யூனிஸ்ட்டுகள் நேபாளத்தில் எதிர்கட்சியாகதானே வரமுடிந்தது. இதில் என்ன விசேடம் இருக்கிறது என்று கேட்பவர்களும் இருக்கக் கூடும். அவர்கள் நேபாள அரசியல் மாற்றங்களை கவனிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

நேபாளத்தில் இந்து மன்னராட்சியே நடைபெற்றது இந்து மன்னர் அரசின் தலைவராக இருந்தார். அவரின் தலைமையின் கீழ் பெயரளவில் தனிக்கட்சி தேசிய ஜனநாயகக்கட்சி அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தது. 32 வருடங்களுக்குப் பின்னர் பல கட்சிகள் கலந்துகொள்ளக் கூடிய ஓரளவாவது சுதந்திரமான தேர்தல் கடந்த மே மாதம் 12 ஆம் திகதியே நடைபெற்றது என்பது நேபாள வரலாற்று

(4ம் பக்கம் பார்க்க)

## இந்திய – சோவியத் – சீன முக்கூட்டணி உருவாகும் சாத்தியம்

அண்மையில் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஜியாங் ஹெயின் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தார். மேற்குலக சக்திகளினதும், அமெரிக்காவினதும் மக்கள் விரோத தேச விரோத செயற்பாடுகள் காரணமாக ஆசிய பிராந்தியத்திலுள்ள ரஷ்யா, சீனா, இந்தியா ஆகிய மூன்று பெரிய நாடுகளும் ஒன்றுடன் ஒன்று புரிந்துணர்வுடன் செயற்படுவதையே இப்பிராந்திய மக்கள் விரும்புகின்றனர். இது இப்பிராந்திய மக்களுக்கு மட்டுமன்றி ஏனைய பிராந்திய மக்களுக்கும் நன்மை தரும்.

1989ஆம் ஆண்டு மே மாதம் சோவியத் தலைவர் சீனாவுக்கு விஜயம் செய்தமையும், 1991 ஏப்ரல் மாதம் சோவியத் பாதுகாப்பு அமைச்சர் சீனாவுக்கு விஜயம் செய்தமையும் நல்ல விளைவுகளை கொண்டுவரவேண்டும் என்றே மக்கள் எதிர்பார்த்தனர். அவ் விஜயங்களால் இரு நாட்டு உறவுகளிலும் பல வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன.

34 வருடங்களுக்கு பிறகு சீனத்தலைவர் ஒருவர், கடந்த மே மாதமே சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ளார். 1969ஆம் ஆண்டில் இரண்டு நாடுகளுக்கிடையில் ஏற்பட்ட பிரதான கொள்கை முரண்பாடு காரணமாக உறவுகள் மோசமடைந்ததுடன் உலக கம்யூனிஸ்ட் கட்சிகளிலும் பிளவுகள் ஏற்பட்டு சீரழிவுகள் ஏற்பட்டன. அண்மையில் இரு நாடுகளுக்குமிடையில் உறவுகள் சுமுகமடைவது உலக கம்யூனிஸ்ட் கட்சிகளாலும் வரவேற்கப்படுகின்றது.

அண்மையில் சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைவர் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்தபோது பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டன. இரு நாடுகளும் ஒன்றுக்கொன்று இராணுவ ரீதியில் அச்சுறுத்தலாக இருப்பதில்லை என்று இணக்கம் காணப்பட்டது. இரு நாட்டு வர்த்தகங்களை மேலும் அதிகரிப்பதன் தேவை வலியுறுத்தப்பட்டது. சீனாவுக்கு இராணுவ ரீதியாக ஒத்துழைப்பை வழங்குவதென சோவியத் யூனியன் உறுதி அளித்துள்ளது.

ஒரு கோடி சுவிஸ் மார்க் பெறுமதியான நுகர்வுப் பொருட்களை கடனாக சீனா சோவியத் யூனியனுக்கு வழங்குவதென உறுதியளித்தது. சோவியத் யூனியனின் முழு வெளிநாட்டுக் கடனையும் சீனாவால் வழங்கமுடியாது என்றாலும் மேற்கத்தேய அமெரிக்க உதவிகளில் சோவியத் அதனது தனித்துவத்தை 'சோஷலிசத்தை' விட்டு விலக வேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது என்ற வகையில் சீனாவின் உதவி சோவியத்தினால் வரவேற்கப்படுகின்றது.

பொருளாதாரத்தில் பலவீனமாக இருக்கும் சோவியத் யூனியனுக்கு நட்புரீதியாக பொருளாதார உதவியை வழங்கவேண்டுமெனவும், மேற்குலகத்திடம் சோவியத் யூனியன் சிக்குப்படுவதை தவிர்க்க தந்திரோபாயரீதியில் பொருளாதார உதவியை சீனா வழங்குவது என்றும் சீனா முடிவு செய்துள்ளது.

சோவியத்தின் உறவால் மங்கோலிய – சீன எல்லையிலிருந்து கவரக ஆயுத படைகளை சோவியத் யூனியன் வாபஸ் பெற்றமையும், கம்போடியாவிலிருந்து வியட்னாம் படைகளும், ஆப்கனிலிருந்து சோவியத்படைகள் வாபஸ் பெறப்பட்டமையும் குறிப்பிடத்தக்க விளைவுகளாகும்.

அண்மையில் இரு நாட்டு தலைவர்களின் சந்திப்பின் போது "சீன சோஷலிஸமா", "ரஷ்ய சோஷலிஸமா" சரி என்பது பற்றி பகிரங்க விவாதத்தில் தாங்கள் ஈடுபடுவதில்லை என்றும் மீண்டும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதேவேளை கொர்பசேவின் சீர்திருத்த மேற்குலக சார்பு அரசியல் மாற்றங்கள் சோவியத்யூனியனில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையை சமாளிக்க பொருளாதாரம், தொழிநுட்பம் என்பவற்றில் சீனா மேற்கொள்ளும் நவீன மயமாககலிலிருந்து அனுபவங்களை படிக்கவேண்டும் என சோவியத் ஆலோசனையாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் பலமடையும் சோவியத் - சீன உறவுகளால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பங்காளதேஷ் மக்களின் அவலமும் ஏகாதிபத்தியவாதிகளின் அலட்சியமும்

பங்காள தேசத்தில் அடுத்தடுத்து வீசிய கடும் புயலினால் அத்தேசம் நிலைகுலைந்துள்ளது. மனித உயிர்கள் பதினைந்து இலட்சம் மாண்டு மடிந்து போயின. மேலும் பத்து இலட்சம் பேர் பட்டினியாலும், நோய்களினாலும் மரணத்தின் விளிம்பில் இருந்து வருகின்றனர். லட்சோப இலட்சம் மக்கள் இருப்பிடங்களை இழந்து அநாதைகளாகி உள்ளனர். இது போன்றதொரு இயற்கை அனர்த்தத்திற்கு அண்மைக் காலத்தில் எந்தவொரு நாடும் ஆட்படுத்தபடவில்லை. அந்த வறுமையான நிலையில் உள்ள மூன்றாம் உலக நாடும் மக்களும் உலகின் உதவியை எதிர்பார்த்து நிற்கின்றனர். குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகள் என வர்ணிக்கப்படும் அமெரிக்கா — ஐரோப்பிய யப்பானிய உதவிகளைப் மிகப் பெரும் அளவில் எதிர்பார்த்தனர். ஏனெனில் அவாகள் உலகின் கஷ்டமுறும் மக்களுக்கு பல்வகை உதவிகளைச் செய்யும் தருமவான்கள் என்ற பிரச்சாரப் பெயர் பெற்றவர்களாயிற்றே.

குவைத் நாட்டின் பிரபுத்துவ ஆட்சியாளர்களுக்கு ஆபத்து வந்த அண்மைய மாதங்களில் சுதந்திரத்தின் பெயரால் அமெரிக்காவும் அதன் நேசநாட்டுக் கூட்டாளி நாடுகளும் எத்தனை விமானங்கள், ஹெலிகோப்டர்கள், கடற்கப்பல்களில் சென்று உதவினார்கள். அதேபோன்றதொரு பெரும் உதவி பதினைந்து இலட்சம் மனித உயிர்களைப் பலிகொண்டு மேலும் பத்து இலட்சம் பேரின் உயிர்களைப் பலிகொள்ள நிற்கும் பங்காளதேஷின் புயற்கொடுமைகளுக்கு உள்ளான மக்களுக்கு அமெரிக்காவும் அதன் நேசநாட்டுக் கூட்டாளிகளும் உதவுவார்கள் என்றே பல அப்பாவித்தனமானவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அப்படி எதுவுமே இடம்பெறவில்லை. ஓரிரு விமானங்களின் உதவி வந்தது. அதன் பெறுமதி இருபது மில்லியன் அமெரிக்க டொலர் மட்டுமேயாகும். அதே வேளை ஈராக்கின் வடபகுதியில் குர்திஷ் மக்களைப் பாதுகாக்கவென அமெரிக்கா அவசர அவசரமாக உதவிப் பட்டாளத்துடன் சென்று செய்த உதவியின் பெறுமதி 556 மில்லியன் அமெரிக்க டொலராகும். பாதுகாப்பு வலயத்தை 1,632 சதுர கி. மீற்றரில் இருந்து 3,510 ச. கி மீற்றராகவும் விஸ்தரித்தது. தனது உதவிகளை தானே தீர்மானித்து திணித்தும் வருகின்றது. பங்காளதேசத்து மக்கள் உதவியை எதிர்பார்த்து நிற்க அதனைத் தட்டிக் கழித்து நிராகரித்து விட்டு குவைத்திற்கும், குர்திஷ் மக்களுக்கும் கோடிக் கணக்கான டொலர்களைச் செலவு செய்து உதவி செய்வதன் உள் நோக்கம் யாது? இதில் குறிப்பானதென்னவெனில் குர்திஷ் மக்கள் மிக மோசமான அவலத்தின் மத்தியிலும் அமெரிக்க உதவியை வேண்டா வெறுப்புடனேயே பெற்று வருவது தான். ஏனெனில் அமெரிக்க உதவியை வெல்வெற் துணி அணிந்த இரும்புக்கரம் என்றே குர்திஷ் மக்கள் நம்புகின்றனர். அதனாலேயே அமெரிக்க உள்நோக்கத்தைப் புரிந்து கொண்ட குர்திஷ் மக்களின் தலைவர்கள் தம்மை அடக்கிய ஈராக் அதிபர் சதாம்ஹுசேயினுடன் அரசியல் தீர்வுக்கு வந்து குர்திஷ் சுயாட்சியை ஏற்றுக் கொள்ளும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளனர். அதாவது அமெரிக்காவின் பொம்மைகளாக குர்திஷ் மக்கள் இருக்க விரும்பவில்லை என்பதையே மேற்படி சுயாட்சி ஒப்பந்தம் மூலம் குர்திஷ் தலைவர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். தமது நாடான ஈராக் துண்டாடப்படக் கூடாது என்பதில் அக்கறை காட்டியுள்ள குர்திஷ் தலைவர்கள் தமது மக்களின் நியாயமான உரிமைகள் வழங்கப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்திய நிதானமான போக்கினால் அமெரிக்கா ஏமாற்றம் கொண்டு ஆத்திரமடைந்து வேறு சதி வேலைகளுக்கு தன்னை தயார் படுத்துகின்றது.

இவ்வாறு அமெரிக்காவின் உதவியின் உள்நோக்கம் பங்களாதேஷில் அம்பலமாகி உள்ளது. ஒரு பத்திரிகையாளர் மிகச் சரியாகக் கூறியது போல் பங்காளதேசத்தில் எண்ணெய் வயல்கள் இருந்திருப்பின் அமெரிக்காவும் நேச நாடுகளும் மிகப் பெரும் உதவிகளைச் செய்ய 3கோடி வந்திருக்கும். துரதிஷ்டப் அந்த நாட்டில் அவ்வாறு அவை இல்லாதது தான் என்பது எவ்வளவு பொருத்தம். ஏகாதிபத்திய வாதிகளின் 'உதவி' 'மனிதாபிமானம்' 'சுதந்திர அக்கறை போன்றவற்றின் தன்மை இத்தகையவை தான் மூன்றாம் உலக நாட்டு மக்கள் தெரிந்து கொள்வது அவசியம்.

படிப்பகம்

# உள்ளூராட்சித் தேர்தலில் இ. தொ. கா. வுக்கு அமோக வெற்றி!

## இந்திய...

[3ம் பக்கத் தொடர்]

இந்தியா எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது என்றும் சோவியத் - சீன ஒத்துழைப்புடன் இந்தியாவையும் இணைத்து ஆசிய பிராந்திய நடவடிக்கையில் ஒருமித்து செயற்படவேண்டும் எனவும் அமெரிக்க மேற்குலக அச்சுறுத்தல்களிலிருந்து இப்பிராந்தியத்தை பாதுகாக்க மூன்று நாடுகளும் இணைந்து செயற்படவேண்டும் எனவும் சோவியத் யூனியனும் சீனாவும் இணங்கியுள்ளன. இது தொடர்பாக விரைவில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் சோவியத் யூனியனின் சீர்திருத்த நடவடிக்கைகளால் சீனாவில் ஸ்திரமான அரசியல் நடவடிக்கைகள் பாதிக்கலாம் என்றும் அது சோஷலிஸத்திற்கு எதிரானதாகும் என்றும் சீனா தெரிவித்துள்ளதுடன் சோவியத்திலிருந்து வெளியாகும் சீர்திருத்தம் பற்றிய செய்திகளை உள்நாட்டுக்குள் பரவாது இருக்க சோவியத் செய்திகளுக்கு சீனா தடை விதித்துள்ளது.

சோவியத் யூனியனில் கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத்துவம் குறைக்கப்பட்டுள்ளதையும் மேற்குலகுசார்பான ஜனநாயக நடவடிக்கைகளையும் கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களையும் சோஷலிஸ விரோத நடவடிக்கைகளாகும் என்றும் சீனா கண்டித்துள்ளதுடன் அவற்றை பின்பற்றமுடியாது என்றும் தெரிவித்துள்ளது.

சீனா தனது நாட்டில் கம்யூனிஸ்ட் கட்சியின் மக்கள் ஜனநாயக சர்வாதிகார சோஷலிஸ பாதை, மார்க்சிச லெனினிஸ மாவோசேதுங் சிந்தனையை வழிகாட்டற் கோட்பாடாகக் கொள்வது என்பனவற்றை உயர்த்திப் பிடிக்கின்றது.

சோவியத் தரப்பில் தங்களது நிலைப்பாட்டை வலியுறுத்தியபோதும் மேற்கொள்ளப்படும் சீர்திருத்த நடவடிக்கைகளால் முதலாவது சோஷலிஸ நாடான சோவியத் யூனியன் உலகில் முதலாளித்துவத்தை நிலைநிறுத்த உதவிபுரியாது. எமது நாட்டில் மேற்குலகஜனநாயகம்தேவையென பலர் வலியுறுத்தியபோதும் அவை ஓரிரவில் நடந்தேறிவிட முடியாது. சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளபோதும் சோவியத் யூனியன் ''சோஷலிஸ நாடாகவே'' இருக்கும் என்றும் சீனாவுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

ஈராக் – அமெரிக்க யுத்தத்தையடுத்து அமெரிக்காவின் பலம் மேலோங்கியுள்ள புதிய சூழ்நிலையில் சோஷலிஸ நாடுகளுக்கு எதிராக அமெரிக்கா எடுக்கும் முடிவுகள் என்பன காரணமாக சோஷலிஸ நாடுகளுக்கிடையிலான ஐக்கியத்தினதும் ஆசிய பிராந்திய நாடுகளின் ஐக்கியத்தினதும் அவசியம் பற்றி சீனா வலியுறுத்தியுள்ளது.

## அமோக வெற்றி!

கடந்த மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் இ. தொ. கா. வுக்கே அமோக வெற்றி கிடைத்துள்ளது என்று அதன் தலைவரும் உல்லாச கைத்தொழில் துறை அமைச்சருமான செள. தொண்டமான் அவர்கள் குறிப்பிட்டார். ஒவ்வொரு சபையிலும்இ தொ.கா. வாக்காளர்களின் தொகையையும் குறிப்பிட்ட அவர், அவர்கள் யூ என். பிக்கு வாக்களிக்காவிட்டால் யூ. என். பி. வெற்றி பெற்றிருக்க முடியாதென்றும் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தலைவர்களை நியமிக்கும்போது இ. தொ. கா. உறுப்பினர்களுக்கு முன்னுரிமை வழங்கும்படியும் ஜனாதிபதி பிரேமதாஸ அவர்களைக் கேட்டுக்கொண்டதாக அறிய முடிகின்றது.

ஆனால்இ.தொ.கா.விடுத்த கோரிக்கையின் படி அதன் உறுப்பினர்கள் தலைவர்களாக நியமிக்கப்படவில்லை. தவிர்க்க முடியாதபடியாலும் முக்கியத்துவமற்றது என கருதியதாலும் அம்பகமுவ நுவரெலியா பிரதேச சபைக்கும் இ தொ.கா. உறுப்பினர்கள் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். விருப்புரிமை வாக்குகளை அதிகமாகப் பெற்றவர்கள் என்ற அடிப்படையிலேயே தலைவர்கள் நியமிக்கப்படுவர் என்று குறிப்பிட்டபோதும் அவ்வாறு நியமிக்கப்படவில்லை. தமிழர்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற அதிகமான சபைகளிலும் தமிழர்கள் தலைவர்களாக நியமிக்கப்படவில்லை.

அதிகமாக விருப்புரிமை வாக்குகளைப் பெற்றிருந்த தமிழர்கள் சில சபைகளில் தலைவர்களாக ஏன் பிரதித் தலைவர்களாகக் கூட நியமிக்கப்படவில்லை. உதாரணமாக கண்டி மாகாண சபையில் ஒரு தமிழர் அதிகமான வாக்குகளைப் பெற்றிருந்த போதும் அவர் நகர பிதாவாக நியமிக்கப்படவில்லை. உப நகர பிதாவாகக் கூட நியமிக்கப்படவில்லை.

உள்ளூராட்சி சபையின் தலைவர்களை நியமிப்பது என்பது வெற்றி பெற்ற கட்சிகளின் உரிமை என்றாலும் இ. தொ.கா.ஒருசமூகத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது என்று கூறிக்கொண்டு யூ. என். பி யுடன் கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டு யூ. என். பிக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்துள்ளது என்ற வகையில் இ. தொ. கா. வை யூ. என். பி. எவ்வளவு தூரம் அங்கீகரித்துள்ளது என்பதிலேயே இ. தொ. கா. வின் வெற்றி தங்கியுள்ளது.

இ தொ.கா. நினைத்தபடி உள்ளூராட்சி சபைகளில் அதன் உறுப்பினர்கள் தலைவர்களாக நியமிக்கப்படவில்லை என்றாலும் ஒரேயடியாக தமிழ்சபைகளாக நாம் நடத்தக்கூடாது. அப்படி நடத்த முற்பட்டால் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு நடந்தகதி நடந்து விடும். அதனால் நிதானமாக நடக்க வேண்டும் என்றும் திரு. தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மேற்படி காரணம் ஒரு புதிய சாதனம் அல்ல. மலையக மக்களுடைய முக்கிய உரிமைப் பிரச்சினையொன்று எழும்போதெல்லாம் நாம் மலையகத்தை வடக்கு கிழக்குப் போன்று மாறவிடக்கூடாது என்று இ. தொ. கா. மலையக மக்களைப் பயமுறுத்தி வருகிறது.

உள்ளூராட்சி சபைகள் வீதிகளை திருத்துவது உட்பட்ட பல புனரமைப்பு விடயங்களையே கவனிக்க அதிகாரமுடையன. அப்படியிருந்தும் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் தோட்டங்கள் கிராமமாக்கப்படும், தொழிலாளர்களுக்கு இலவசமாகக் காணி வழங்கப்படும் போன்ற வாக்குறுதிகள் இ. தொ. கா. வால் தேர்தல் பிரசாரத்தின் போது முன்வைக்கப்பட்டன.

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளூராட்சிசபை தேர்தலில் வாக்களித்திருந்த போதும் உள்ளூராட்சி நிர்வாகத்தின் கீழ் தோட்டங்களில் எந்த புனரமைப்பையும் மேற்கொள்ள முடியாது. ஏனெனில் தோட்டங்கள் உள்ளூராட்சி சபைகளுக்குக் கீழ் வரமாட்டா மாகாண சபைக

(5ம் பக்கம் பார்க்க)

## இந்து இராஜ்யத்தில்...

(3 ம் பக்கத் தொடர்)

றில் மிகவும் முக்கிய நிகழ்வாகும். அப்படியான தேர்தல் நடைபெற என்ன காரணம் என்பதையும் அறியவேண்டும்.

நேபாளத்தில் தனிக்கட்சி ஆட்சியின் கீழ் 'ஜனநாயக நடைமுறைகள் சுதந்திரம் மருந்துக்கும் இருக்கவில்லை. விலைவாசி உயர்வு உட்பட நாட்டு மக்கள் பல்வேறு வகைப்பட்ட பொருளாதார இன்னல்களுக்கு உட்பட்டு இருந்தனர்.ஒரேயொரு 'இந்து ராஜ்யம்' என்ற வெறுமையான பெருமைமட்டும் மிஞ்சியிருந்தது.

எனவே மக்கள் மத்தியில் ஜனநாயகத்துக்கான போராட்ட உணர்வு நாளுக்கு நாள் அதிகரித்தது. பல கட்சிகளுக்கும் கீழ் மக்கள் ஆர்ப்பட்ட ஊர்வலங்கள் உட்பட பல போராட்டங்களைச்செய்தனர். அப்போராட்டத்தில் நேபாள காங்கிரஸ், நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட்கட்சி என்பனஇணக்கத்துடன் ஐக்கியப் பட்டுசெயற்பட்டன. நேபாள காங்கிரஸ் கம்யூனிஸ விரோதி கட்சியென்றபோதும் தேசிய நலன் கருதி தந்திரோபாயத்துடன் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அதனுடன் இணக்கத்துடன் செயற்பட்டது.

நேபாள ஐக்கியகம்யூனிஸ்ட் கட்சி என்றஅமைப்பு இரண்டு பிரதான கம்யூனிஸ்ட் கட்சிகள் இணைந்து தேசிய நலன் கருதி ஆக்கிய அமைப்பாகும்,

மாக்சிஸ்ட் கட்சியும், மாக்கிஸ்ட்லெனிஸ்ட் கட்சியும். அவற்றுக்கிடையே முரண்பாடுகள் இருந்தபோதும் அவை இரண்டும் இணைந்து நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட்கட்சி (அல்லது ஐக்கிய மாக்சிஸ்ட் லெனினிஸ்ட்டுகள்) என்றஅமைப்பை உருவாக்கி மக்களை ஸ்தாபனப்படுத்தி போராட்டங்களை முன்னெடுத்தன.

நேபாள காங்கிரஸ், ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி என்பன நடத்திய போராட்டங்களினால் ஆளும் கட்சி தாக்குப்பிடிக்க முடியாததனால் நேபாளத்தில் இடைக்கால தேசிய அரசாங்கம ஒன்றை அமைக்க வேண்டிய நிர்ப்பந்தம்ஏற்பட்டது. அந்தஇடைக்கால தேசிய அரசாங்கத்தின் அமைச்சரவையில் நேபாள காங்கிரஸ் தலைமைஇடத்தை வகித்தாலும் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு பிரதான பங்கை கொடுக்காமல்இருக்க முடியவில்லை.

அதனால் இடைக்கால தேசிய அரசாங்கத்தில் ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி அங்கம் வகித்து தனது பலத்தை ஸ்திரப்படுத்தியது. ஒரு கட்டத்தில் நேபாள காங்கிரசுடன் ஏற்பட்ட பிரதான கருத்து முரண்பாடுகள் காரணமாக தேசிய அரசாங்கத்திலிருந்து ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி வெளியேறியது.

அதன் பின்னர் நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டது. தேர்தலில் நேபாள ஆட்சியை ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி கைப்பற்றும் என்ற அபிப்பிராயம் இருந்தபோதும் அது பலமான எதிர்க்கட்சியாகவே முடிந்தது, அதற்கு பல காரணங்கள் உண்டு.

எனினும் நேபாள ஐக்கிய கம்யூனிஸ்ட்கட்சி என்ற அமைப்பு உருவாக்கப்பட்டமையும், பொதுத் தேவைக்காக பிற்போக்கு நேபாள காங்கிரசுடன் இணைந்து செயற்பட்டமையும் கவனிக்கத்தக்கன. நேபாள காங்கிரசுடன் எதிர்த்து செயற்பட வேண்டிய தேவையும் காலமும் வரும்வரையும் அதனுடன் இணக்கத்துடன் செயற்பட்டன. இப்போது நேபாள காங்கிரசுக்கு அடுத்த பலமான கட்சியாக வளர்ச்சி கண்டுள்ளது. இப்போது கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிராக நேபாள காங்கிரஸ் மட்டும் இருப்பதாகவே தெரிகிறது.

எனவே அடுத்த கட்டத்தை நோக்கி ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி வளர்ச்சி அடையும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இன்று உலகில் கம்யூனிஸ்ட் கட்சிகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளின் மத்தியில் நேபாளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சி மிகவும் முற்போக்கானதும், வரவேற்கத்தக்கதுமாகும்.

தடைசெய்யப்பட்டிருந்த மேற்படி கம்யூனிஸ்ட் கட்சி குறுகிய காலத்தில் மேற்படி வளர்ச்சியை அடைந்திருப்பது சாதாரண விடயமல்ல.

அதேவேளை நேபாள தேர்தலில் நேபாள காங்கிரஸ் ஊழல் புரிந்துள்ளமையும், அமெரிக்கா நேபாள தேர்தலில்தலையிட்டு கம்யூனிஸ்ட்டுகளுக்கு எதிரான சூழ்நிலையை உருவாக்குவதில் பல முயற்சிகளை மேற்கொண்டது என்பதும் வெளிப்படையாக தெரியவந்துள்ளன.

## மலையக பாடசாலைகளுக்கு தமிழ் நாட்டிலிருந்து ஆசிரியர்கள் இறக்குமதி!

மலையக தமிழ்ப் பாடசாலைகளில் விஞ்ஞானம் கணிதம் என்பவற்றை கற்பிக்க தமிழ் நாட்டிலிருந்து ஆட்கள் இறக்குமதி செய்யப்பட விருப்பதாக செய்திகள் அடிபடுகின்றன. தமிழ் நாட்டிலிருந்து விஞ்ஞானம் கணிதம் ஏன்பவற்றை கற்பிக்க மலையகத்திற்கு வருபவர்கள் ஒப்பந்த அடிப்படையில் குறிப்பிட்ட காலத்திற்கு வேலை செய்வார்கள் என்று கூறப்படுகின்றது. அதற்கான ஒப்பந்தம் தமிழ்நாட்டுடன்செய்யப்பட்டு வருதாகவும் தெரிகின்றது.

எமது நாட்டிலே தமிழ் மொழி மூலம் கற்பிக்கக்கூடிய விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் இல்லாமல் இல்லை. விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களாக வரக்கூடிய தகுதியுடையவர்கள் இல்லாமலும் இல்லை. ஏன் தமிழ் மொழி மூலம் கற்பிக்கக்கூடிய விஞ்ஞான கணித பட்டதாரிகளும் இல்லாமல் இல்லை.

தமிழ் மொழி மூலம் விஞ்ஞானம், கணிதம் கற்பிக்கக் கூடியவர்களில் அதிகமானவர்கள் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்பதனால் மலையக மக்களுக்கோ மலையக தமிழ் மாணவர்களுக்கோ விருப்பம் இல்லாமலும் இல்லை.

தமிழ் நாட்டிலிருந்து இங்கு வருபவர்களுக்கு இங்குள்ளவர்களைவிட கூடிய சம்பளமும், வசதியும்செய்துகொடுத்தேயாக வேண்டும். அதனால் கல்விக்கானச்செலவு அதிகரிப்பு ஏற்படும்.

இங்குள்ளவிஞ்ஞானம் கணிதம் கற்பிக்கக்கூடியவர்களுக்கு நிரந்தர ஆசிரியர் நியமனம் கொடுப்பதில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது? அதை செய்வதில் பெரிய நட்டம் ஏற்படுமென்றால் அவர்களுக்கு ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்தையாவது கொடுக்க முடியாதா?

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# யுத்தத்தை நிறுத்த . . .

[1ம் பக்கத் தொடர்]

வடக்குக் கிழக்குப் பிரதேசத்தில் கடந்த வருடம் யூன் மாதம் 11 ஆம் திகதி யுத்தமொன்று திணிக்கப்பட்டு இன்றுடன் (11-06-1991) ஒரு வருடமாகியும் அழிவுபூர்வமான துரதிஷ்டவசமான அந்த யுத்தம் இன்னும் தொடர்கிறது. இவ்வேளையில் எமது கட்சி பல விடயங்களைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றது.

கடந்த ஒரு வருடமாக நடைபெறும் யுத்தத்தினால் வடக்குக் கிழக்குப் பகுதி ஒரு யுத்தப் பிரதேசமாக்கப்பட்டுள்ளதுடன், அப்பிரதேச மக்களுக்கும், நாட்டிற்கும் அழிவுகளையே மீதமாக்கியுள்ளது. அப்பிரதேசத்தில் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதுடன் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு மிகவும் கொடுமையான பஞ்சநிலைமையே நிலவுகிறது. அங்கு விதிக்கப்பட்டுள்ள எரிபொருள்- மின்சாரம், விவசாயப் பசளை, கிருமிநாசினித் தடைகள் உட்பட ஏனைய பொருளாதாரத் தடைகளும் போக்குவரத்துச் சீர்குலைப்பும் வேலையின்மையும்அப் பிரதேசமக்களின்அன்றாட வாழ்வையே சீர்குலைத்து சின்னாபின்னமாக்கியுள்ளன.

யுத்தம் காரணமாக பாடசாலைகள், தாக்கப்பட்டுள்ளதாலும், பாடசாலைகளில் அகதிகளின்தொகை அதிகரித்துள்ளமையாலும் வடக்குக் கிழக்குப் பிரதேச கல்விநிலை மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அப் பிரதேசத்திற்கு மருந்து வகைகளை எடுத்துச்செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளமையால் நோயாளிகள் அவதிப்படுகின்றனர். பலர் இறந்துள்ளனர். அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளவர்கள் எவ்வித வசதியுமின்றி பல வகைப்பட்ட துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

மேலும் இந்தியப் படைகள் இங்கிருந்து வாபஸ் பெறப்பட்டுவிட்டதாலும், இந்திய அரசியலில் தற்போது சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாலும் சில தலைவர்கள் இந்தியா, இலங்கையில் இராணுவத் தலையீட்டைச்செய்யாது என்று கூறிவருவதாலும், இந்தியா இலங்கையில் தலையீட்டைச் செய்யாதென்றோ, இந்தியாவின் தலையீடு எப்போதும் இராணுவ ரீதியாக மட்டுமே இருக்குமென்றோ நாம் அசட்டையாக இருந்துவிடலாகாது.

இந்தியாவிலுள்ள மேலாதிக்க சக்திகளும், ஏனைய வெளிநாட்டுசக்திகளும் இலங்கையின் இனப்பிரச்சினையை தங்கள், தங்கள் சொந்த நலன்களுக்காக பயன்படுத்துவதிலேயே அக்கறை கொண்டிருக்கின்றன. பிராந்திய மேலாதிக்க சக்திகளினதும், வல்லரசுகளினதும் பலப் பரீட்சைக் களமாக இலங்கைமாறிவிடுமா என்ற அச்சம் நீங்கிவிட்டதென்று கூறிவிட முடியாது.

கடந்தமாதம் நடைபெற்ற எமது கட்சியின் இரண்டாவது தேசிய மகாநாட்டில் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட சில விடயங்களைத் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

அரசியல் தீர்வொன்றின் மூலமே யுத்தத்தை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவர முடியும். தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான ஓர் இடைக்காலத் தீர்வை முத்தரப்புப் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே காண்பதற்குக் காலதாமதமின்றிசகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படல் வேண்டும். இலங்கை அரசும்- அரசியல் கட்சிகளும் ஒரு தரப்பாகவும், விடுதலைப்புலிகளும் ஏனைய தமிழ் அமைப்புகளும் மறு தரப்பாகவும், இந்தியா அதனது பிராந்திய மேலாதிக்க நலனை முன்தள்ளாத வகையில் மூன்றாவது தரப்பாகவும் செயற்பட்டு முன்னெடுக்கப்படும் பேச்சுவார்த்தையின் அடிப்படையிலான அரசியல் தீர்வே தேசிய இனப்பிரச்சினைக்கு குறைந்த பட்சத்தீர்வைக் கொண்டுவரவுள்ள சரியான வழிமுறையாகும். இத்தீர்வானது வடக்குக் கிழக்கு இணைந்த பிரதேசத்தில் சுயநிர்ணய உரிமை அடிப்படையில் தமிழ்தேசிய இனத்திற்கான பூரண அதிகாரம் கொண்ட பிரதேச சுயாட்சியை வழங்குவது இப் பிரதேச சுயாட்சியின் கீழ் முஸ்லிம் மக்களின் தத்துவத்தைப் பேணிப் பாதுகாக்கும்வகையிலான சுயாட்சி உள்ளமைப்புகளை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் உருவாக்கி அவர்களது தனித்துவ வளர்ச்சியை ஏற்படுத்துவது, அதேபோன்று மலையகத்திலும் ஏனைய பிரதேசங்களிலும் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள பிரசாவுரிமையைப் பூரணப்படுத்தி அவ்வப் பிரதேசங்களில் அவர்களுக்கான நிலத்தை வழங்கி சுயநிர்ணய உரிமை அடிப்படையில் சுயாட்சி உள்ளமைப்புக்களை உருவாக்கி அவற்றுக்கான அதிகாரங்களை வழங்கி நடைமுறைப்படுத்துவதன் மூலம் அவர்களது தனித்துவத்தையும், பொருளாதார, கல்வி சமூக, கலாச்சார விருத்திகளை முன்னெடுத்துச்செல்ல வேண்டும். இவையாவும் அரசியலமைப்பு வாயிலாக உறுதியையும், உத்தரவாதத்தையும் கொண்டிருக்க வேண்டும். மேலும் வடக்கு- கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கோர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர், உடைமை, இருப்பிடம், தொழில் இழப்புக்களைப் பெற்ற அனைத்து மக்களுக்கும் பூரண நஷ்டஈடும், தகுந்த புனர்வாழ்வையும் குறுகிய கால எல்லைக்குள் வழங்கி அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச்செய்யவேண்டும்.

# உள்ளூராட்சித்தேர்தலும் ஜனநாயகமும்

கடந்த மே 11ம் திகதி வடக்கு கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. நீண்டகால இடைவெளிக்குப் பின் நடாத்தப்பட்ட இத் தேர்தலுக்கு பன்முக நோக்கங்கள் இருந்தன. ஒன்று, நாட்டில் ஜனநாயகம் இருப்பதாகக் காட்டிக்கொள்வது. இரண்டாவது, தேர்தலில் எப்படியாவது வெற்றியைத் தேடிக்கொள்வதன்மூலம் தற்போது யூ.என்.பியினால் முன்னெடுக்கப்படும் விதேசிய பொருளாதார அரசியல் கொள்கைகளை மேலும் தொடர்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்துவது. மூன்றாவது, மக்களின் உணர்வலைகளின் விகிதாசாரத் தன்மையை தம்மளவில் கணித்து அடுத்த நடவடிக்கைகளுக்கு தயாராவது.

அரசாங்கம் இத்தேர்தலை நடத்த முடிவு செய்த அதேவேளை அதன் வெற்றிக்கான சகல வழிவகைகளையும் கையாள்வது என்ற சத்தியப் பிரமாணத்தையும் எடுத்துக்கொண்டது. உள்நாட்டின் பெரு முதலாளிகளும், வெளிநாட்டு பலதேசிய நிறுவனங்களும் இத் தேர்தல் வெற்றிக்காக அரசாங்கத்தின் பின்னால் இருந்து செயல்பட்டன. அரசாங்கம் தனது திறந்த பொருளாதாரக் கொள்கையின்பகட்டுத்தனத்தையும் ஒரு பிரசாரமாக்கியது. வீட்டுத் திட்டம், ஜனசவிா, வறுமை ஒழிப்புத் திட்டம் போன்றன நீடிக்க தமக்கு ஆதரவு தரும்படி கேட்டமை மட்டுமன்றி இத்தேர்தலில் அரசு தோற்றால் மேற்படி திட்டங்களை நிறுத்திவிடப் போவதாகவும் அச்சுறுத்தல் விடப்பட்டது. நகர்ப்புற மக்களில் ஒரு பிரிவினர் தற்போதைய அந்நிய இறக்குமதிகளால் ஏற்பட்டுள்ள பகட்டுத்தனத்தில் மயக்கமடைந்திருக்கின்றமை யூ. என். பி. யின் வெற்றிக்கு ஒரு பங்கினை வழங்கியுள்ளன என்பதும் மறுப்பதற்கில்லை.

மேலும் சிங்கப்பூர், தென்கொரியா, தாய்வான் பாணியிலான பொருளாதாரக் கொள்கை ஒன்றினைப் புதிய சிந்தனை எனக் காட்டி நிற்கும் அரசு அந் நாடுகளில் கையாளப் படும் தேர்தல் உத்திகளையும் பிரச்சார முறைகளையும் பின்பற்றி நின்றமை மட்டுமன்றி பின் கதவுவேலைகளை மிக நுணுக்கமாகச் செய்து வெற்றியையும் தேடிக்கொண்டது. இத் தேர்தலை ஒரு ஜனநாயகத் தேர்தல் என்றோ அல்லது நேர்மையான தேர்தல் என்றோ கொள்ள முடியாது. ஏனெனில் தேர்தல் ஒன்றை நடத்தி அதில் வெற்றி பெற்றுள்ளதாகக் காட்டிக் கொள்வதில் ஏற்கனவே பல ராணுவ சர்வாதிகாரிகள் கூட முன்னுதாரணமாகியுள்ளனர். பிலிப்பீன்ஸில் மார்க்கோஸ், இந்தோனிசியாவில், சுகார்ட்டோ, சிலியில் பினோசெற், போன்றவர்கள் எண்பது தொண்ணூறு வீத தேர்தல் வெற்றியை காட்டிச் சாதனை புரிந்தவர்களாவர் சிங்கப்பூரில் லீகுவாலீயும் தென்கொரிய, தாய்வான் ஆளும் தரப்பினரும் தேர்தலில் வெற்றியைக் காட்டி நிற்பவர்களே.

மேலும் ஆளும் யூ. என். பி. பணத்தைத் தண்ணீராக இறைத்து பிரசாரம் செய்த அதேவேளை எதிர்க்கட்சிகளிடையே தனது கையாட்களையும் கோடரிக்காம்புகளாக்கிக் கொண்டது. அத்துடன் தான் ஐக்கியப்படக் கூடியவர்களுடன் ஐக்கியமாகியும் கொண்டது. அரசின் உயர் பதவி வகிப்பவரான ஜனாதிபதியே தேர்தல் பிரசாரத்தின் கதாநாயகனாகி தனிநபர் காட்சிக் கூட்டங்களை சகல பிரதேசங்களிலும் நடத்தியமை குறிப்பிடக் கூடியதொன்றாகும். மேலும் இத் தேர்தல் காலத்தில் ஒரு 'ஜனநாயக இடைவேளை' விடப்பட்டு 11ம் திகதி இரவு பன்னிரண்டு மணிக்கு மீண்டும் அவை வாபஸ் பெறப்பட்டமைகவனத்திற்குரியதாகும். இதன் அர்த்தம் தொடர்ந்தும் அடிப்படை ஜனநாயக மனித உரிமை மறுப்பு என்பதாகவே உள்ளது.

யூ. என். பி. யின் 'வெற்றி' எனக் கொண்டாடப்படும்இத் தேர்தலில் எதிர்க் கட்சிகள் தமது பிளவுபட்டு நின்ற பங்களிப்பை வழங்கி இருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இத் தேர்தல் இடம் பெறுவதற்கு இரண்டு மாதங்கள் முன்பாக எதிர்க் கட்சிகள்யாவும் ஒன்று சேர்ந்து மிகப் பெரும் யூ. என். பி. எதிர்ப்பு கூட்டங்களையும், தொழிற் சங்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தன. மிகப்பெரிய கூட்டம் பெப்ரவரி 21ம் திகதி கொழும்பில் இடம் பெற்றது அதற்கு சில நாட்கள் முன்பாக அன்னையர் முன்னணியினர் பெரும் பேரணியில் அணிதிரண்டனர். தொழிற் சங்க கூட்டணி ஏழு கோரிக்கைகளை முன்வைத்து பிக்கெற்றிங் நடத்தின, இவையாவும் அரச எதிர்ப்பு அலையின் எதிர்கால வளர்ச்சிக்கு அடித்தளம் என்றே நேர்மையான யூ. என் பி. விரோத சக்திகள் நம்பின. ஒவ்வொரு சிறு துரும்பையும் யூ. என். பிக்கு எதிராக ஒன்று படுத்துவதுபற்றியும் -இலட்சோபலட்சம் மக்கள் கலந்து கொள்ளும் வெகுஜன நடவடிக்கை பற்றியும் மிக ஆரவாரமாகப் பேசப்பட்டது. திரண்டிருந்த மக்கள் இதனை நம்பி மிகுந்த ஆரவாரம் செய்து வரவேற்றனர். ஆனால் தேர்தல்பற்றி அறிவிக்கப்பட்டது தான் தாமதம் ஒரு மாதத்திற்கு முன்பு பேசிய யாவற்றையும் எதிர்க் கட்சிகள் சகலதும் மறந்தன. இணங்க முடியாத நிலையில் பிளவுபட்டு தனித்தனியாகவும் சில இடங்களில் போட்டித் தவிர்ப்புடனும் தேர்தல் களத்தில் மும்மரமாகினர். மேதினத்தில் பல்வேறு கூட்டங்களை நடத்தி தமது பலவீனத்தின் மையங்களை வெளிக்காட்டியும் கொண்டனர். இதனால் யூ. என். பி. மிகுந்த உற்சாகம் அடைந்ததுடன் யூ. என். பி. எதிாப்பு சக்திகள் உற்சாகம் இழக்கவும் செய்தன.

மக்கள் மத்தியில் பொங்கி வழிந்த யூ. என். பி. எதிர்ப்பு அபிலாஷை சரியான வழியில் எதிர்க்கட்சிகளால் வழிநடத்த முடியாத நிலை இருந்துங்கூட மக்கள் தமது எதிர்ப்பை கடுமையாகவே இத்தேர்தலில் வெளிப்படுத்தினர் என்பது மறுக்கப்பட முடியாத அடிப்படை உண்மையாகும். எந்தெந்த கட்சிகளுக்கு கூடுதலாகவும் குறைவாகவும் மக்கள் வாக்களித்தனர் என்று விவாதம் நடத்துவதைவிட யூ. என். பி.யினுடைய மிகக் கூடுதலான அச்சுறுத்தல் தனமான பிரசாரங்கள் மத்தியிலும் அதற்கு அடிபணிய மறுத்த தமது வாக்கின்மூலம் அரச விரோதத்தை கணிசமான வீதத்தில் வெளிப்படுத்திய மக்களின் மன உணர்வுகளையும் அதன் தாக்கமான அம்சங்களையுமே நாம் கணிப்பிலெடுத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையில் ஏற்கனவே முதலாளித்துவச் சட்டங்களால் வரையறுக்கப்பட்ட அடிப்படை ஜனநாயக தொழிற் சங்க மனித உரிமைகள் மிக அப்பட்டமாகவே மீறப்பட்ட ஒரு சூழலில் நடத்தப்பட்ட உள்ளூராட்சித்தேர்தல் எவ்வாறு ஜனநாயகமானதொன்றாக இருக்க முடியும்? எனவே ஆளும் தரப்பில் இருந்து கூறப்படும் ஜனநாயகம் என்பது ஆளுவோருக்கான- சுரண்டுவோருக்கான ஜனநாயகமே அன்றி ஆளப்படுவோருக்கான மக்கள் ஜனநாயகமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ளல் வேண்டும். உள்ளூராட்சித் தேர்தலும் அதன மூலமான ஜனநாயகம் பற்றிய பிரசாரமும் அடுத்து தொடரப்போகும் பாசிச நடவடிக்கைகளுக்கான ஒரு வகைப் போர்வை மட்டுமே.

## உள்ளூராட்சித்...

(4 ம் பக்கத் தொடர்)

ளின் நிர்வாகத்தின் கீழ் கூட தோட்டங்கள் வரமாட்டா. ஏனெனில் மாகாணசபைச் சட்டத்தின்படி பெருந்தோட்டத் தொழில்துறை மாகாண சபை நிர்வாகத்துக்குள்ளடங்காது. அவையாவும் மத்திய அரசின் ஜனாதிபதி நிர்வாகத்தின் கீழேயே வருகின்றன.

ஆக, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இ. தொ. கா. அமோக வெற்றி என்றாலும் சரி, யூ. என். பி அமோக வெற்றியென்றாலும் சரி தோட்டத் தொழிலாளர்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# தேசிய ஜனநாயகமும் - சுய நிர்ணய உரிமையும் வென்றெடுக்கப்படல் வேண்டும்!

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) 2ஆவது தேசிய மாநாட்டில் தீர்மானம்

### புதிய - ஜனநாயக கட்சி எனப் பெயர் மாற்றம்

1991 மே 4ம் திகதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) இரண்டாவது தேசிய மாநாடு கொழும்பில் நடைபெற்றது. மேற்படி மாநாடு அரசியல் அறிக்கை, ஸ்தாபன அறிக்கை, வேலைத் திட்டம், அமைப்பு விதிகளுக்கான திருத்தம், நிதி அறிக்கை




இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி(இடது)யின் 2வது தேசிய மகாநாடு முடிவடைந்த பிறகு புதிய ஜனநாயக கட்சி என்ற பெயர் மாற்றத்தின் பின்னர் 'இன்றைய அரசியல் நிலைமையும் இலங்கையின் எதிர்காலமும்' என்ற தலைப்பில் கொழும்பிலுள்ள அ.லி.சே. சங்க தலைமையக மண்டபத்தில் மே மாதம் 5ம் திகதி நடைபெற்ற பகிரங்கக் கருத்தரங்கில் பொதுச்செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் உரையாற்றுகிறார். அருகில் தலைமைவகித்த தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையாவும், மலையகப் பிரதேசச்செயலாளர் தோழர் சிவ. இராஜேந்திரனும் அமர்ந்திருக்கிறார்கள்.

கட்சிப் பெயர் மாற்றம், புதிய மத்திய குழுத் தெரிவு ஆகிய விடயங்களை தனது நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டு விவாதங்களையும் கலந்துரையாடல்களையும் தீர்மானங்களையும் முடிவுகளையும் மேற்கொண்டது. கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சி. கா. செந்திவேல் சமர்ப்பித்த விரிவான அரசியல் அறிக்கை தேசிய நிலைமை, தேசிய இனப்பிரச்சினை, சர்வதேசிய நிலை என்பவற்றை உள்ளடக்கி இருந்தது. கட்சியின் நீண்டகால வேலைத் திட்டம், புதிய ஜனநாயகத்தை வென்றெடுக்கும் பன்னிரண்டு அம்சங்களை உள்ளடக்கி இருந்தது. உடனடி வேலைத்திட்டம் புதிய ஜனநாயகத்தையும் சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுக்கும் பதினைந்து அம்சத் தீர்மானங்களைக் கொண்டிருந்தது. கட்சியின் தற்போதைய பெயரைப் புதிய ஜனநாயகக் கட்சி என மாநாடு ஏகமனதாகத் தீர்மானத்தின் மூலம் பெயர் மாற்றம் செய்து கொண்டது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் வருகை தந்திருந்த மாநாட்டுப் பிரதிநிதிகள் மேற்படி மாநாட்டில் ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையிலான விரிவான கருத்துக்களை முன்வைத்து விவாதங்கள், கலந்துரையாடல்கள், தீர்மானங்கள் என்பவற்றில் பங்கு கொண்டனர். மாநாட்டிற்கு உள்நாட்டில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் பல வாழ்த்துச் செய்திகள்கிடைத்தன. மாநாட்டில் புதிய மத்திய குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டது. அம் மத்தியகுழு கட்சியின் பொதுச் செயலாளராக தோழர் திரு. க. செந்திவேல் அவர்களையும், தேசிய அமைப்பாளராகத் தோழர் இ. தம்பையா அவர்களையும், பொருளாளராக தோழர் சோ. தேவராஜா அவர்களையும் தெரிவு செய்ததுடன் அரசியற் குழு உட்பட ஏனைய பொறுப்புதாரிகளையும் தெரிவு செய்து கொண்டது.

மாநாட்டின் முடிவுகளையும் தீர்மானங்களையும் பகிரங்கப்படுத்தும் வகையில் 5. 5. 91 அன்று மாலைநான்கு மணிக்கு அரசாங்க லிகிதர் சேவை மண்டபத்தில் பகிரங்க அரசியல் கருத்தரங்கு 'இன்றைய அரசியல் நிலையும் இலங்கையின் எதிர்காலமும்' என்னும் தலைப்பில் நடத்தப்பட்டது. தோழர் தம்பையா தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் தோழர் சி. கா. செநதில்வேல் சி. இராஜேந்திரன் ஆகியோர் விரிவான உரைகளை வழங்கினர்.

# ராஜீவை கொலை செய்தது யார்?

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரே கொலை செய்தனர் என்ற முடிவிலிருந்து கொண்டு இந்திய புலனாய்வு துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். நாளாந்தம் பல விபரங்கள் கிடைத்து வருவதாக பத்திரிகை செய்திகள் மூலமாக அறிய முடிகின்றது. ஆனாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினரோ தாங்கள் ராஜீவ் காந்தியை கொலை செய்யவில்லையென்றும் அவரை கொல்வதற்கு எவ்வித காரணமும் இல்லை என்றும் கூறிவருகின்றனர்.

ராஜீவ் காந்தி கடைசியாக 'நியூயோர்க் டைம்ஸ்'க்கு பேட்டி யொன்றை கொடுத்திருக்கிறார். அந்த பேட்டியில் சி. ஐ. ஏ. இந்தியத் தலைவர்களையும் இந்தியாவையும் இலக்காக கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார்.

தமிழீழ புலிகள் தாமாக முடிவெடுத்து ராஜீவ் காந்தியை கொலை செய்திருக்க முடியாது. அவ்வியக்கத்திலிருந்த சிலரை வெளிநாட்டு சக்திகள் கூலிப்படையாக அமர்த்தியிருக்கலாம் என்று சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைலிருந்த போது தமிழ் மக்களுக்கும் தமிழீழ புலிகளுக்கும் இழைத்த கொடுமைகளை இலங்கை தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள். இதற்காகவே தமிழீழ புலிகள் ராஜீவ்காந்தியை கொலை செய்தனர். அவரை கொலை செய்யும் படி பிரபாகரனே உத்தரவிட்டார் என்றும் சிலர் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

எந்த ஒரு நடவடிக்கையையும் யார் நேரடியாக சொல்கிறார்கள் என்பதனை விட அரசியலில் எந்த சக்திக்கு அதிகம் நன்மை பயக்கிறதோ அந்த சக்தியே அந் நடவடிக்கையை செய்தது என்ற முடிவுக்கே வரமுடியும் அப்படி பார்க்கும் போது இந்திரா காங்கிரசுக்கு எதிர்க் கட்சியினர் ராஜீவ்காந்தியை கொலை செய்திருக்கலாம் என்று சிலரும், தமிழீழ விடுதலை புலிகள் கொன்றிருக்கலாம் என்று சிலரும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தியாவில் நிலையான ஆட்சி நிலவினால் சி. ஐ. ஏ. வும் அமெரிக்காவும் அதனது நேசநாடுகளும் அவற்றின் நோக்கத்தை நிறைவேற்ற முடியாது என்பது தெளிவானதே. நிலையான ஆட்சியை இந்தியாவில் ஏற்படுத்தக் கூடிய தலைவர் ராஜீவ்காந்தி என்பது சர்வதேச ஆய்வாளர்கள் கருதினர் என்பதும் தெரிந்ததே. அதனால் ராஜீவ் காந்தியின் மறைவால் சி.ஐ. ஏ. வும், அமெரிக்காவும் அதனது நோக்கங்களுமே பெரிதும் நன்மை அடைவனவாகும்.

எனவே சி.ஐ ஏ. வே ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னணியில் இருந்திருக்க முடியும் என்ற அபிப்பிராயமும் நிலவுகிறது.

இது பற்றி இந்திய புலனாய்வு திணைக்களமே ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். ஆனாலும் மூன்றாம் உலக நாட்டில் அமெரிக்காவுக்கு எதிரான தலைவர் கொலை செய்யப்பட்டுள்ளமையால் அதுபற்றி மிகவும் உன்னிப்பாக ஆராய வேண்டியுள்ளது.

இவ்வேளை ராஜீவ்காந்தியின் படுகொலையை அடுத்து வெளிவந்த புதிய—ஜனநாயக கட்சியின பத்திரிகை அறிக்கையை கவனிப்பது அவசியமாகும்.

புதிய—ஜனநாயக கட்சியின் தேசிய அமைப்பாளர் தோழர் இ. தம்பையா வெளியிட்ட அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

''முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தியின் படுகொலையை புதிய— ஜனநாயக கட்சி கண்டிப்பதுடன் தற்போது மூன்றாம் உலக நாடுகளில் பல்கிப் பெருகி வரும் இவ்வாறான அநாகரிக அரசியல்—தனிநபர் படுகொலைகளை தடுத்து நிறுத்த மூன்றாம் உலக நாட்டு மக்கள் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

அநாகரிக அரசியல் அடக்கு முறைகளும் அரசியல் படுகொலைகளும் மூன்றாம் உலக நாடுகளில் தற்போது நாளாந்த வாழ்க்கை முறையாகி விட்டது. வித்தியாசமான அரசியல் கொள்கைகளையும் நடைமுறைகளையும் கொண்டிருப்பவர்களை கொல்லுவது மேற்கத்தேய நாடுகளில் தோன்றியிருப்பினும் அந்நாடுகளில் தற்போது அவை அருகிவிட்டன. ஆனால் மேற்கத்தேய குப்பைகளின் இறுதி வாழிடமாக மாற்றப்பட்டுள்ள மூன்றாம் உலக நாடுகளில் அரசியல் — தனிநபர் படுகொலைகள் நாளாந்த வாழ்க்கை முறையாகிவிட்டன.

அழிவு பூர்வமான ஆயுதங்கள் மேற்கத்தேய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டாலும் மூன்றாம் உலக நாடுகளிலேயே பிரயோகிக்கப்படுகின்றன. எயிட்ஸ் போன்ற

(2ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை தெஹிவளை இல. 26/74, வைத்தியா வீதியில் வசிக்கும் இ. தம்பையா அவர்களால் கொழும்பு-12, இல. 201, டாம் வீதியிலுள்ள I.குமரன் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்